கள் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்றன. கொடுக்கப்படுகின்ற பரிசு களின் விவரங்கள் பின்வருமாறு :

கிராம அளவில்—ரூ. 10.

வட்டார அளவில்—முதல் பரிசு ரூ. 100.
இரண்டாம் பரிசு ரூ. 50.

மாவட்ட அளவில்—முதல் பரிசு ரூ. 300.
இரண்டாம் பரிசு ரூ. 200.

மாநில அளவில்—முதல் பரிசு ரூ. 2,000.
இரண்டாம் பரிசு ரூ. 1,000.
மூன்றும் பரிசு ரூ. 500.

இந்தப்பரிசுகள் தவிர, பரிசு பெற்றவர்களுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கப் படுகின்றன. மேற்குறிப்பிட்ட போட்டிகளுக்கு மேலாக, உழவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக அனைத்திந்தியப் பயிர் விளைச்சல் போட்டி ஒன்றும் உள்ளது. இது மத்திய அரசால் நடத்தப் பெறுகிறது.

ஒவ்வொரு பயிர் குறித்தும் அனைத்திந்திய அளவில் மூன்று பரிசுகள் கீழே கண்டவாறு வழங்கப்படுகின்றன:

முதல் பரிசு—ரூ. 3,000.
இரண்டாம் பரிசு—ரூ. 1,200.
மூன்றும் பரிசு—ரூ. 800.

இப்படிப்பட்ட ஊக்கங்கள் தரப்படுகின்றன. தனியாகக் கரும்புக்கு இருக் கிறதா என்ற விவரம் இல்லை. இல்லையென்றால், அதற்கும் இப்படிப்பட்ட திட்டத்தைச் செய்ய முயற்சிக்கிறோம்.

Artificial rain

*881 *Q*.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the success, if any, achieved so far in the field of artificial rain making experiments conducted in the State ?

மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி : 1955–1967 ஆண்டுகளில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகளிலிருந்து, செய்முறையின் வெற்றியை உறுதியாக கூறக் முடியாவிட்டாலும் மேகத்தைத் தூண்ட கால்சியம் குளோரைடு மற்றும் சோடியம் குளோரைடு சேர்ந்த கலவையை உயர் உஷ்ண நிலையில் ஆவியாக மாற்ற ஒரு ஆவியாக மாற்றும் கருவிக்குப் (Vaporizer) பதிலாக, பல ஆவியாக மாற்றும் கருவிகளைப் பயன் படுத்தினால், செய்முறையின் வெற்றிக்கு வாய்ப்புக் கூறுகள் அதிகமாகும். அதிகச் செலவின் காரணமாக இப்பரிசோதனைகள் தொடர்ந்து நடத்தப்பட வில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, தற்போது நாம் தீவிர பசுமைப் புரட்சித்திட்டத்தின் அடிப்படையில் பூமிக்கு அடியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து விளைச்சலை அதிகப்படுத்துகிற திட்டத்தில் ஈடு

பட்டிருக்கிறோம். அதற்குச் செலவும் குறைவு. ஆகவே, இந்த இயற்கை மழை பரிசோதனையை நாம் தொடர்ந்து அனுஷ்டிக்காமல் பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரைக் கொண்டு திட்டங்களை ஊக்கப்படுத்த அரசு மேலும் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்போது பூமிக்கு அடியிலிருந்து கொண்டு வர வேண்டிய தண்ணீருக்காகத் திட்டங்களை நமது சர்க்கார் முழு மூச்சாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சர்க்கார் இந்தப் பரிசோதனைக்கு ஒதுக்கிய தொகை மிகவும் குறைவு. இந்தப் பரிசோதனையை நடத்துவதற்கு அதிகப் படியான தொகை கேட்டார்கள். இது மிகவும் அவசியம் என்ற காரணத்தினாலும், அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் இந்தப் பரிசோதனை நல்ல வெற்றி பெற்று இருப்பதினாலும், நமது சர்க்கார் நிபுணர்களை அனுப்பி வெளிநாடுகளில் இந்தத் திட்டம் எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடக்கிறது என்று பார்த்து, நம்முடைய மாநிலத்தில் அதை அமுலாக்க வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தப் பரிசோதனை உலகில் எங்கும் வெற்றி பெற்று நடைமுறையில் இருப்பதாகத் தகவல் இல்லை. இருந்தாலும், ஒரு லட்ச ரூபாய் செலவில் 1955-ம் ஆண்டு இந்தப் பரிசோதனை செய்ய நல்ல குழு ஒன்றைப் போட்டு ஏற்பாடு செய்து நமது மாநிலத்தில் பல இடங்களில் சோதனை செய்தார்கள் என்றாலும், இது வெற்றி பெறவில்லை. மேலும், நமது இந்திய அரசு, இவ்வரசின் செயற் குறிப்பின்மேல், அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கழகம், புது டில்லி, அணுசக்தி துறை, திட்டக்குழு மற்றும் இந்திய வானியல் துறைகளைக் கலந்தாலோசித்து, அவற்றின் கருத்துக்களின் மேல் இவ்வரசின் செயற்குறிப்பினை மறு ஆய்வு செய்யக் கேட்டுக்கொண்டது.

இந்திய வானியல் துறை கடந்த இருபது வருடங்களாக செயற்கை மழை உண்டாக்கும் பயிற்சிகளில் போதுமான அளவு திறன் பெற்றுள்ளதால், மழை உண்டாக்குதல் மற்றும் வானியலில் வெளிநாட்டு வல்லுநர்களை அழைக்க வேண்டிய அவசியம் இந்நிலையில் தேவையில்லை என்று வானியல் துறை கூறியது. பொதுவாக, இந்திய அரசு, ஐக்கிய நாடுகள் தூதுக்குழுவினை அழைக்க ஆதரவு தரவில்லை. மாநில நில-நீர் நெறியாளர், செயற்கை மழை உண்டாக்கும் பரிசோதனைகள் நடத்தத் தேவையில்லை என்றும், செயல்படுத்தத் தயாராகும்போது, திட்டத்தினை இந்திய அரசின் பரிசீலனைக்காக நாளடைவில் அனுப்பலாம் என்றும் தற்போது கூறியுள்ளார்.

திரு. கோவை செழியன் : விஞ்ஞானிகளால் மழை கொண்டு வர முடியவில்லை

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற முறையில் முயற்சி செய்து பார்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்தக் குறளுக்கு அவர்கள் சொல்கிற விளக்கம் சரியானதாக இல்லை. "பெய்யெனப் பெய்யும் மழை" அதாவது தன் கணவனுக்கு அவள் மழை போன்றவள் என்ற பொருளில் சொல்லியிருக்கிறது. தாய்மார்களைக் கூப்பிட்டு "போய், நீங்கள் மழை பெய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்" என்று சொல்லி, அப்படி மழை பெய்ய வேண்டும் என்று சொன்னவுடனேயே மழை பெய்யா விட்டால், அவளுடைய கற்பில் சந்தேகம் வரும் என்ற காரணத்தினால் வள்ளுவர் ஜாக்கிரதையாக எழுதியிருக்கிறார். அந்தக் குறளுக்கு அது அர்த்தம் இல்லை.

சுற்றுலாப் பேருந்துகள்.

* 882 வினா-திரு. பி.எஸ். மணியன்: மாண்புமிகு பின்தங்கியவகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

.அரசு சார்பில் நவீன வசதிகள் கொண்ட சுற்றுலாப் பேருந்துகள் (Tourist Bus) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை. ஆனால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் அப்படிப்பட்ட எண்ணங்கள் உள்ளன.

Production of Paper.

*883 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state the steps taken by the Government to augment the availability of raw materials for the production of paper in this State ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பேப்பர் நிறுவனங்களுக்குத் தேவையான மூங்கில், கற்பூர இனக் கலப்பு மரங்களை வனத் துறை, விரைந்து வளரும் மரங்களை வளர்க்கும் திட்டத்தின் கீழ் பயிரிட்டு வருகிறது. இதுவரை மூங்கில் 3,663 ஹெக்டேர் பரப்பளவிலும், கற்பூர இனக் கலப்பு மரங்கள் 15,355 ஹெக்டேர் பரப்பளவிலும் பயிரிடப் பட்டுள்ளன. 1972–73-ல் இம் மரங்கள் 2,250 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்போது கிடைக்கக்கூடிய இந்த கச்சாப் பொருள் போதுமானதாக இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இதை அதிகரிக்க இன்னும் அதிகமான மூங்கில் மரங்களை வளர்க்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து உண்மை என்று கருதுகிறோம். அதற்காகப் பரிசீலனை செய்து, புதிதாகச் சில பகுதிகளில் மூங்கில்களை வளர்ப்பது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசிடம் இருக்கிறது.